அனாதை இல்லங்களுக்கு மான்யம்

*225 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வித் துறையின் கீழ் நடைபெற்று வரும் அனாதை இல்லங்களுக்கு (Orphanages) வருடத்திற்கு ஒரு பிள்ளைக்கு ரூ. 100 ஆகக் கொடுக்கும் மானியத்தை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த தேதி முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) & (இ) கல்வித் துறையின் பொறுப்பிலுள்ள அனாதை இல்லங்களில் சேர்க்கப் பட்டுள்ள ஒவ்வொருவர் குறித்தும் ஆண்டு மானியமாக தற்போது ரூ. 120 கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த இல்லங்களில் இருப்பவர் ஒவ்வொருவர் குறித்தும் ஆண்டொன்றுக்குத் தற்போது வழங்கப் படும் மானியத்தை 1—10—1969 முதல் ரூ. 120-லிருந்து ரூ. 144-ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைக்கு அளிக்கப்படும் அறிக்கைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது குறித்து.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. During the last sitting several reports have been placed on the table of the House. One report is with regard to the fire accidents that took place in the City of Madras and another report deals with the Bus Transport Workers and Students' clash. The third report relates to Vettakkaranpudur. We want to know whether the Hon. Speaker will make arrangements for a discussion to take place on these reports or whether these reports have been placed just for our consumption or notice. Also, will the Government be pleased to give indications as to when these reports would be taken up for discussion on the floor of this House.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் எந்தெந்த அறிக்கைகள், எவ்வெப்பொழுது வைக்கப் படவேண்டும் என்பதைப்பற்றி பிசினஸ் அட்வைஸரி கமிட்டி கூடிப் பேசி, முடிவு எடுக்கிறது. அந்தக் கமிட்டி முடிவு செய்தபடி அறிக்கைகளை வைப்பது நல்லது. கமிட்டி கூடிப் பேசி முடிவெடுத்தபடியே அறிக்கைகள் பேரவையில் வைக்கப்படு கின்றன.

1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. பேரவையில் எந்தெந்த விஷயங்களை எவ்வெப்பொழுது எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்திருக்கிறோம். அந்த முடிவின்படியே செய்து கொள்ளலாம்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டத்தில் கம்பளிப் பூச்சிகளின் தொல்லையால் நிலக்கடலைப் பயிர் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள், மதுரை மாவட்டத்தில் கம்பளிப்பூச்சிகளின் தொல்லையால் நிலக் கடலைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட விஷயமாதலால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்.

4. விளக்க உரை.

பொறியியல் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து கல்வி—சுகாதார அமைச்சரின் விளக்க உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் மாணவர் பிரதிநிதிகள் நேற்று என்னைச் சந்தித்து பொறியியல் கல்லூரி மாணவர்களின் மனத்தை அலைக்கழித்துவரும் சில சிக்கல்களைப் பற்றியும், அதன் விளைவாக அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைபற்றியும் என்னிடம் மனம் விட்டுப் பேசினர். நடைமுறையில் உள்ள தொழில் நிலைகளுக்கேற்ப தங்களைத் தகுதிப்படுத்துகின்ற செய்முறைப் பயிற்சி இல்லாததன் காரணமாக பட்டம் பெற்ற பிறகு தங்களுடைய தகுதிக்குரிய வேலைகளைப் பெறுவதில் பெரும்பான்மையான பொறியியல் பட்டதாரிகள் இடர்ப்படுகின்றனர் என்ற அவர்களின் கவலையை மாணவர் தெரிவித்தனர். எனவே, ஓராண்டுக் கால அளவிற்கு மாணவர்கள் அனைவருக்கும் தகுந்த படிப்பு உதவித் தொகையுடன் விருப்ப அடிப்படையில் செய்முறைப் பயிற்சி அளிக்க வகை செய்யும் ஒரு திட்டத்தை அரசு வகுக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்காக செய்முறைப் பயிற்சியினை வரையறுத்த அளவில் அளிப்பதற்கான முயற்சி இந்திய அரசின் கல்வி அமைச்சினால் ஏற்கப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது என்று மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பெருமளவு பட்டதாரிகளுக்கு